


**பப்பாளியூர்**

பெங்களூருவில் இந்த சீசனில் பப்பாளி பழங்கள் தாறுமாறாக விற்பனையாகும். தமிழகத்தின் பல மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்படும் பப்பாளிப் பழங்களை குவித்து வியாபாரிகள் பணமாக்கிவிடுவார்கள். பிரேசர் டவுன் பகுதியில் மலை போல் குவித்து வைக்கப்பட்டுள்ள பப்பாளி குவியலே இதற்கு சாட்சி.

தினகரன் வசந்தம்
5.9.2010

# பிற ஆண்களுடன் பேசும் காதலி

## டியர் டாக்டர்,

இன்ஜினியரிங் காலேஜில் கடைசி வருடம் படிக்கிற மாணவன் நான். ஒரு வருடமாக ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். இரண்டு குடும்பங்களுக்கும் இடையில் நல்ல நட்பும் உண்டு. எனது கல்லூரியிலேயே அவள் முதல் வருடம் படிக்கிறாள். கடந்து போன நாட்களை என் வாழ்க்கையில் பொற்காலம் என்றே சொல்லலாம். எங்கள் இருவருக்குள்ளும் அவ்வளவு அன்னியோன்யம், அன்பு... அவளைப் பார்த்த பிறகுதான் என் வாழ்க்கைக்கே ஒரு அர்த்தம் பிறந்ததாகக் கூட உணர்ந்திருக்கிறேன். தினமும் எப்படியாவது இருவரும் சந்தித்துக் கொள்ள முயற்சி செய்து பார்த்து விடுவோம்.

ஆனால் சமீப காலமாக அவள், வேறு சில பையன்களோடு பேசுவதையும், பழகுவதையும் பார்க்கிறேன். என்னைத் தவிர அவள் வேறு எந்த ஆணுடன் பேசுவதைப் பார்த்தாலும் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதைப் பற்றி அவளிடம் பேசினால் கோபப்படுகிறாள். என்னைத் தவிர்க்கிற மாதிரி உணர்கிறேன். இதனால் அடிக்கடி எங்களுக்குள் சண்டை வருகிறது. பைத்தியம் பிடித்த மாதிரி இருக்கிறேன். நாங்கள் பழகியது, என்னுடன் அவள் பேசிய வார்த்தைகள் எல்லாமே பொய்யா? இந்தப் பிரச்னையை எப்படிக் கையாள்வது என்றே தெரியவில்லை. மறுபடி மறுபடி இதைப் பற்றிப் பேசினால், ஒரு வேளை அவளை நிரந்தரமாகவே இழந்து விடுவேனோ என பயமாக இருக்கிறது. நானும் என் மனத்தை மாற்றிக் கொள்ள எவ்வளவோ முயற்சி செய்து பார்த்து விட்டேன். முடியவில்லை. அவள் இல்லாத ஒரு வாழ்க்கையை என்னால் கற்பனைகூட பண்ணிப் பார்க்க முடியவில்லை. 5 மாதங்களாக என்னால் சரியாகப் படிக்க முடியவில்லை. தூக்கம் கூட இல்லை. குடித்தால்தான் கொஞ்ச நேரமாவது தூங்க முடிகிறது. எங்கள் இருவருக்கும் இடையில் நடக்கிற இந்த பனிப் போர் வீட்டில் யாருக்கும் தெரியாது. ஒரு பெண்ணுக்காக இப்படியெல்லாம் நடந்து கொள்வதா என சில சமயங்களில் தோன்றினாலும், நாங்கள் பழக ஆரம்பித்த நாட்களை நினைத்துப் பார்த்தால் அந்த காலம் திரும்பக் கிடைக்காதா என மனது ஏங்குகிறது. இந்தப் பிரச்னையை நான் எப்படித்தான் அணுகுவது? அவளை மறுபடி என் பக்கம் ஈர்க்க என்னதான் வழி?

**- பெயர், ஊர் வெளியிட விரும்பாத வாசகர்.**

## அன்பு நண்பரே,


உங்களுடைய மனநிலை எனக்குப் புரிகிறது. இப்போதைக்கு உங்களுக்குத் தேவை, உங்





''தலைவர் கையை எதுக்காக மசாஜ் பண்றாங்க?''
''அவர் கரத்தை பலப்படுத்து றாங்களாம்!''
- ஜோ.ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.





உறவுச் சிக்கல்களுக்குத் தீர்வு சொல்கிறார் மனநல மருத்துவர் கவுதம் தாஸ்

கள் தீவிர மன அழுத்தத்துக்கான சிகிச்சை. குடிப்பதைத் தவிருங்கள். மன அழுத்தத்துக்கான சிகிச்சையின் மூலம் இந்தச் சூழ்நிலையை எப்படி சரியாகப் பார்ப்பது என்கிற தெளிவு பிறக்கும்.

இந்த உலகிலேயே மிக அழகான உணர்வு காதல். தூக்கமில்லாத இரவுகள், பதில் இல்லாத செல்போன் அழைப்புகள், தனிமை என எல்லாமே காதலில் சந்தோஷமாக இருந்த தருணங்களை நினைவூட்டி, ரணப்படுத்தவே செய்யும். எல்லாவற்றையும் மீறி, காதலியின் வாழ்க்கையில் வேறு யாரோ ஒரு ஆண் இருப்பதாக நம்புகிற உங்கள் மனசு...

இப்போதைக்கு நீங்கள் செய்ய வேண்டியது உணர்ச்சிவசப்படாமல் யோசிப்பது. எங்கே தவறு நடந்தது என ஆற, அமர யோசியுங்கள். எங்கே, எப்போது, என்னவெல்லாம் பேசினீர்கள் என யோசித்துப் பாருங்கள். எங்கே தவறு நடந்திருக்கலாம் என்பதற்கான க்ளூ கிடைக்கும். காதலியின் மீதான அளவு கடந்த பொசசிவ்னஸ்தான் உங்களுடைய இந்த எண்ணத்துக்கான அடிப்படை.

உங்கள் காதலி வேறு ஆணுடன் பேசுவதைப் பார்க்கிற போது, அதைத் தவறாக நினைக்காமல், பெருமையாக எடுத்துக் கொள்ளுங்கள். அத்தனை பேரின் கவனத்தையும் ஈர்க்கிற ஒருத்தி, உங்களுடைய காதலி என பெருமைப்படுங்கள். மற்ற ஆண்களிடம் இல்லாத எந்த குணம் உங்களிடம் ஸ்பெஷல் என யோசியுங்கள். ஒரு வேளை அப்படி ஒன்றுமே இல்லாவிட்டால், இனியாவது அப்படி எதையாவது வளர்த்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். காதலி என்பதற்காக அவர் 24 மணி நேரமும் உங்கள் அருகிலேயே, உங்கள் நினைப்பிலேயே இருக்க வேண்டும் என எதிர்பார்க்காதீர்கள்.




சிறந்த காதலனாக இருக்க என்ன செய்ய வேண்டும் என்றும் யோசியுங்கள். மற்றவர்களுடன் கலகலப்பாகப் பேசிப் பழகுகிற பெண்களிடம் உங்களுக்கு அதிகப் பரிச்சயம் இல்லை எனத் தோன்றுகிறது. உங்கள் காதலி அப்படி இருப்பதால், அதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாமல் தவிக்கிறீர்கள்.

காதலியிடம் முதலில் மனம்விட்டுப் பேசுங்கள். உங்களுடைய எண்ணங்களைச் சொல்லுங்கள். காதலியின் மீதான சந்தேகத்தில் அடிக்கடி அவருக்கு போன் போட்டு எங்கே, யாருடன் இருக்கிறார் என்றெல்லாம் விசாரிப்பது அவர் உங்களை விட்டு விலகிப் போகவே வழி வகுக்கும். மற்ற வேலைகளில் உங்களை பிசியாக வைத்திருப்பது ஒன்றே இப்போதைக்கு உங்களுக்கான அட்வைஸ்.

தொகுப்பு: **ஆர்.வைதேகி**

மேலும் பெண்களுக்குப் பயனுள்ள செய்திகளுக்கு:
http://www.dinakaran.com/ladiesnew




**783** டாக்டர்களை அரசு மருத்துவமனைகளில் நியமிக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

**25** கோடி ரூபாயை தஞ்சை பெரிய கோயில் புனரமைப்புக்காக மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

**121** பாலங்கள் கட்ட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

**100** கோடி ரூபாய் செலவில் கோவை அருகே உயிரியல் பூங்கா அமைக்கப்படுகிறது.

**900** ஐஏஎஸ் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி அடைந்த தமிழர்களின் எண்ணிக்கை.

**65** ஆக உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயதை மாற்றும் அரசியலமைப்பு சட்டத் திருத்த மசோதா, மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4600** கோடி ரூபாய் இழப்பு, திருட்டு விசிடி தொழிலால் இந்திய சினிமாவுக்கு.

**24** சதவீத அமெரிக்கர்கள் ஒபாமாவை முஸ்லிம் என்று நினைக்கிறார்கள்.

**12** புதிய தொழிற்பேட்டைகள் தமிழகத்தில் தொடங்கப்பட உள்ளன.

**871** கோடி ரூபாயை, சென்னையில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்துக்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.